# நன்மைகள் செய்த இறைவனுக்கு

நன்மைகள் செய்த இறைவனுக்கு
நன்றியின் பலியை செலுத்திட வாரீர் (2)
நன்மைகள் நாமே அடைவோம் வாரீர்

நன்மைகள் செய்த இறைவனுக்கு
நன்றியின் பலியை செலுத்திட வாரீர் (2)
நன்மைகள் நாமே அடைவோம் வாரீர்

உள்ளத்தை தருவது திருப்பலியாம்
உகந்ததென்றால் அது பெரும் பலியாம் } (2)
கொடைகள் பெறுவது தகும் வழியாம் (2)
குறையினை போக்கும் கோவழியாம்

நன்மைகள் செய்த இறைவனுக்கு
நன்றியின் பலியை செலுத்திட வாரீர் (2)
நன்மைகள் நாமே அடைவோம் வாரீர்

வானத்தை நோக்கும் நறும்புகை போல்
வாருங்கள் உள்ளத்தை அளித்திடுவோம் } (2)
அனைத்தையும் அன்புடன் கொண்டு வந்தே (2)
ஆண்டவர் திருமுன் படைத்திடுவோம்

நன்மைகள் செய்த இறைவனுக்கு
நன்றியின் பலியை செலுத்திட வாரீர் (2)
நன்மைகள் நாமே அடைவோம் வாரீர்